
# துன்னாலை அயில் நின்றெல்லை விநாயகர் கோயில்
# (வல்லியானந்தப் பிள்ளையார்)



University of Jaffna
235.4
TUN
50266(AR: Main)

# திரத்தேர் வெள்ளோட்ட

## மலர். ★ 1978

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best compliments from

A. S. Sangarapillai & Sons

15 & 17, Dam Street,

Colombo - 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

துன்னாலை வல்லியானந்தப் பிள்ளையார் கோவில்

# தேர்த்திருப்பணி மலர்

## ஆசியுரை.

( கோவில் பிரதம குருக்கள் அவர்கள் )

"இந்தச் சரீரம் மூத்தி சாதனம்" இதனை எல்லாரும் நன்கு சிந்திக்க வேண்டும். ஆன்மாக்களை ஆணவமலம் அநாதியே பிடித்திருப்பதால் ஆன்மாவின் இயல்பான உபசரிக்குந் தன்மையும், பேதமற்ற அன்புநிலையும் மறைபட்டுக் கிடக்கின்றன. அந்தமறைப்பை நீக்கி முத்தியை அடைவதற்காகவே பரம்பொருள் ஆன்மாக்களுக்காக இந்த உலகத்தையுஞ் சரீரத்தையும் உதவியிருக்கின்றார். எனவே ஆன்மாக்கள் ஆணவச் சேர்க்கையாலே தங்களுக்கேற்பட்ட கொடூரத் தன்மையையும் (அசுரத்தன்மையையும்) உலோபத் தன்மையையும் நீக்கிப் பெத்தநிலையினின்றும் விடுபடுவதற்கு அல்லும் பகலும் அயராது முயற்சிக்கவேண்டும். அம்முயற்சியின் பயன் மும்மலங்களையும் நீக்கிப் பேரின்பமடைதலேயாம். இத்தகைய ஆன்மாக்களின் நீண்ட வரலாறுகளே சுருக்கப்பட்டு, தசமகோற்சவமாக ஆலயந்தோறும் காட்டப் படுகின்றன.

இரதோற்சவம் சிருஷ்டி முதலிய பஞ்சகிருத்தியங்களுள் சங்காரத்தைக் குறிக்குமென்று ஆகமங்கள் கூறுகின்றன. கணக்கில்லாத பிறவிகளை எடுத்த ஆன்மா, எல்லாத் துன்பங்களையும் கடந்து மும்மலங்களை அறுத்து இன்பத்தை அனுபவிக்கும் பாவனையாக அமைந்ததே தேர்த்திருவிழா. இத்தேர்த் திருவிழா ஆலய வழிபாடுகளுக்கெல்லாம் உச்சமான பதிபுண்ணிய விழாவாகும்.

தேரோட்ட நாள் துன்னாலை வாழ் மக்களுக்கு ஓர் பொன்னாளாகும். இப்புனித நன்னாளில் எல்லாம் வல்ல வல்லியானந்தப் பிள்ளையார். சித்திரத்தேரில் இவர்ந்தருளி, ஆன்ம கோடிகளுக்கு எல்லையற்ற திருவருளைப் பொழிந்து இன்புறச் செய்வார் என்பதில் எள்ளளவு ஐயமுமில்லை. இம்மணித்தேரை உருவாக்குவதற்குப் பலவாற்றாலும் உதவிபுரிந்த மக்களுக்கெல்லாம் விநாயகப் பெருமான் வேண்டியவற்றையெல்லாம் நல்கிப் பேரின்பப் பெருவாழ்வடையச் செய்வாராக! நறுமணத்துடன் இத்தெய்வீக மலர் வெளிவரப் பலவிதத்திலும் உதவி புரிந்த மெய்யன்பர்களுக்கும் எமது ஆசி உரித்தாகுக.

தொல்லைகள் யாவும் நீக்கும் தூயஐங் கரத்தாய் போற்றி
எல்லையி லின்ப மெல்லாம் எமக்கருள் எந்தாய் போற்றி
கல்லுநேர் நெஞ்சத் தார்க்கும் கருணைசெய் தருள்வாய் போற்றி
வல்லியா னந்த வள்ளல் வண்மலர்ப் பதங்கள் போற்றி.

கல்விசேர் மாந்தர் மற்றும் கற்றறி வில்லா மக்கள்
பல்வகைத் தொழில்கள் ஆற்றும் பண்புடை யவர்க்கும் யார்க்கும்
மல்குபே ரின்பம் நல்கும் மதகரி முகத்து வள்ளல்
வல்லியா னந்தர் பொற்றேர் வரம்பில்பே ரூழி வாழி!

— இராமநாதக்குருக்கள்

University of Jaffna
250266
Library
250266
250266
ARCHIVES
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவில் வரலாறு

"தேங்கு வளம்பொலியச் சீரார் கவின்கொடியைத்
தாங்கும் எழிலிலங்கைத் தாய்தலமேல் — ஓங்குமணி
மாமகுட மாமெனவே மன்னோர் புகழ்ந்துரைக்குஞ்
சேமமிகு யாழ்ப்பாண தேயமதில் — நாமகளும்
செந்தா மரைத்திருவுஞ் சிந்தையொரு மித்துநடம்
வந்தாடு மேன்மையது வாய்ந்ததுவும் — கொந்தாரும்
பூங்காவும் சோலைகளும் போற்றுகனிக் காவினமும்
பாங்காய் வளர்ந்து பரந்ததுவும் — நீங்காத
காதலுடைக் காளைகளும் கன்னியரும் சங்கீத
நாதம் பரப்பிவரும் நல்லிசையும் — வேதமுறை
ஓதுமுயர் வேதியர்தம் மொப்பில்யா கப்புகையெப்
போதும்விண் ணேக்கிப் பொலிந்ததுவும் — ஆதுலரை
அன்போ டழைத்தவர்கட் காகுவன வீந்துதவும்
மன்போன்ற மக்கள் மலிந்துதவும் — பொன்போன்ற
நாவலரைப் பாவலரை நல்லநெறிப் பாவையரைக்
காவலரைப் பெற்றுக் களித்துதவும் — ஆவலுடன்
நாவாரப் பத்தரெலாம் நாளும் துதித்திறைஞ்சும்
தேவா லயங்கள் செறிந்ததுவும் — பாவாரப்
போற்றுங் கலாசாலை பொன்மாட மாளிகைகள்
ஏற்றம் படைத்தே யிலங்குவதும் — சாற்றரிய
செந்நெற் கழனியெலாந் தேறல் மடைதிறந்து
கன்னல் தனைவளர்க்குங் காட்சியதும் — மன்னுமெழில்
துன்னிக் கரும்பாலை சேர்வதாற் துன்னாலை
என்னும் பெயர்கொண் டிலயங்கியதே''

இவ்வாறு புலவர்பாடும் புகழமைந்து எண்ணரிய நலம் பெற்றுத்திகழும் துன்னாலைப்பதி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பழம்பெரும் பதியென்பதைப் பாவலரும் நாவலரும் ஏற்றுப் போற்றுகின்றனர். அண்மையில், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று விசேடங்களும் ஒருங்கமைந்த வல்லிபுர ஆழ்வார் திருக்கோயில் அமைந்திருப்பதனால் துன்னாலையின் புகழ் மேலும் குன்றிலிட்ட விளக்குப்போல் என்றென்றும் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஆயில்நின்றொல்லை விநாயகர்” என்னும் திருப்பெயர் திருக்கோவிலின் புராதன மகிமையை வலியுறுத்தி நிற்கின்றது. கி. பி. 1870ஆம் ஆண்டு தொடக்கம் அலங்காரத் திருவிழா நடைபெற்று வருகிறது. 1963ம் ஆண்டு கொடித்தம்பம் அமைக்கப்பெற்று சிறந்த முறையிற் திருவிழா நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

1923ஆம் ஆண்டு இரண்டாம் முறையாகக் கும்பாபிடேகம் (குடமுழுக்கு) நிகழ்ந்தமையும் நினைவுகூரத் தக்கது. 1965ஆம் ஆண்டு அழகாகக் கும்பாபிடேகம் நிகழப்பெற்றதும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

சிவராத்திரி, திருவெம்பாவைப் பூசைகள் கூட்டுப்பிரார்த்தனைகள், பிரசங்க ஒழுங்குகள் முதலியன திருக்கோயிலின் மறுமலர்ச்சிகளை எடுத்துக்காட்டும் மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சிகளாம்.

உயர்திரு. சின்னத்தம்பிஐயர், சி. கணேசையர், க. முத்தையர், சோ. இரத்தின சபாபதிஐயர், இ. தியாகராசாஐயர் ஆதியோர் விநாயகப் பெருமானுக்கு விதிப்படி பூசை செய்த, செய்கின்ற புண்ணியப் பெருந்தகைகளாவர்.

எல்லையில்லாத திருவருள் புரியும வல்லியானந்தப் பிள்ளையாருக்குத் தேர் இல்லாத குறை பல மெய்யன்பர்களின் பிடர்பிடித்துந்தியது. இதன்பயனுக 1975ஆம் ஆண்டு தேர்த்திருப்பணி வேலை தொழிற்பட ஆரம்பித்தது. பலமெய்யன்பர்கள் தேர்த்திருப்பணிக்காக அல்லும்பகலும் அயராது தொண்டாற்றினுர்கள். புண்ணிய சீலர் பலர் பண உதவி புரிந்தார்கள்.

“நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொ லருளீர்!
ஆண்மை யாள ருழைப்பினை நல்கீர்”

என்று அன்பர்கள், சைவசமய பக்தர்களை விநயமாக வேண்டி நின்றுர்கள். அன்பர்களின் வேண்டுகோள் ஓரளவிற்குப் பயனளித்த தெனலாம். சித்திரத்தேரைத் திறம்பெற அமைத்த பிரதமஆசாரி திரு. சி. அப்பாத்துரை அவர்களின் அயரா உழைப்புப் பெரிதும் போற்றத்தக்கதாகும். அன்னுர் புரிந்த நன்றியை என்றென்றும் மறவாது பாராட்டுவோம்.

தேர்நிற்கும் மண்டபமும், எல்லாம்வல்ல வல்லியானந்தப் பிள்ளையாரின் இன்னருளால் இனிதே நிறைவேறிற்று. இக்கட்டிடம் அமைப்பதிற் பேருதவி புரிந்த திருமதி வைத்திலிங்கம் சரஸ்வதிக்கும், திரு. வி. பிரதாபனுக்கும் நாம் நன்றி கூறும்கடமைப்பாடுடையோம். வல்லியானந்த வள்ளலாரின் அருட்பிரசாதமும் அன்னுருக்குக் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

தெய்வம் இல்லை என்ற எண்ணம் பெருகிவரும்இக்காலத்தில் வல்லியானந்தப்பிள்ளையாரை அன்புடன் வணங்கி அருள் பெற்றோர் பலர் இன்றும் என்றும் இருக்கிறார்கள் அவர்களைக் கண்கூடாகக் காண்கிறோம். எல்லையில்லாக் கருணை வாய்ந்த வல்லியானந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பிள்ளையாரின் அற்புதத் திருவிளையாடல்களை ஈண்டு விரிப்பின் பெருகுமென விரி வஞ்சி விடுக்கின்றோம்.

இடவிசேடத்தாலும், மூர்த்தி விசேடத்தாலும் மேம்பட்ட இவ்வாலயத்தை யாவரும் வணங்கி இட்டசித்திகளையும் பரகதியையும் பெறுவார்களாக.

''ஆலயந் தொழுவது சாலவும் நன்று''

"திருக்கோயி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லாவூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
அவையெல்லா மூரல்ல அடவிகாடே."

— திருநாவுக்கரசுநாயனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஊருக்குத் துன்னாலை என்னும் பெயர் ஏற்பட்ட காரணம்:

"துன்னாலை மிக்குத் துகடீர் பெருஞ் செல்வம்
எந்நாளும் ஈண்டிக் கொழித்ததே—பொன்னாடும்
இங்குற்ற தோவென்று ஐய மெழுந்ததூஉம்
எங்கள்துன் னாலையே யாம்."

இதன் பொருள்: நெருங்கிய கரும்பாலைகள் (கரும்பை கசக்கிப் பிழியும் யந்திரங்கள்) மிகுந்து குற்றமில்லாத செல்வத்தை அதிகமாக விளங்கச் (பண்டைக் காலத்தில்) செய்ததால் செல்வச் செழிப்புள்ள சுவர்க்க லோகம் (பொன்னுலகம்) மண்ணுலகத்திலே வந்து பொருந்திவிட்டதோ என்று ஒருகாலத்தில் ஐயத்தை எழுப்பிவிட்டதும் எங்கள் துன்னாலையேயாம்,

[பண்டைக் காலத் துன்னாலையிற் சீனி, சர்க்கரை, கற்கண்டுக்குப் பஞ்சமில்லை.

ஆனால் இன்று ... ? எங்கள் சோம்பலே காரணம்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் தேர் இழுத்தல்.

கண்ணிகள்

வாருங்கள் வாருங்கள் பக்தர்களே — பிள்ளையாரை
வணங்கித் துதித் திடுவோம்
சேருங்கள் சேருங்கள் பக்தர்களே — ஒன்று
சேர்ந்துமே தேரை இழுத்திடுவோம், 1

கூடியே ஒன்றாக நின்றிடுவோம் — கரம்
கூப்பியே அப்பனை ஏத்திடுவோம்
பாடி மகிழ்ந்து கொண்டாடி அனைவரும்
பக்தியாய்த் தேரை இழுத்திடுவோம். 2

ஆல வட்டங்கள் எடுத்திடுவோம் — எம
அதன்பான நெஞ்சைக் கொடுத்திடுவோம்
கோலமுட னிளம் வால வயோதிபர்
கூடியே தேரை இழுத்திடுவோம். 3

சந்தனங் குங்குமம் சாத்திடுவோம் — நறும்
சவ்வாது பன்னீரை ஊற்றிடுவோம்
பந்துசன ரொருமித்து வந்தேகூடிப்
பற்றியே தேரை யிழுத்திடுவோம்.. 4

கர்ப்பூர தீபங்கள் காட்டிடுவோம் — இரு
கையை நீட்டி அருள் கேட்டிடுவோம்
அற்புதமாக அழகா யமைந்திட்ட
ஆணிப்பொற றேரை யிழுத்திடுவோம். 5

சித்திரத் தேரை யிழுத்திடுவோம் — எங்கள்
சிறுமைகள் யாவையும் போக்கிடுவோம்
உத்தர நாளில் இழுத்திடுவோர் — என்றும்
உய்யவே தேரை இழுத்திடுவோம். 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரின் தத்துவம்

"தேவாலயமாவது எங்கும் வியபகராய் மறைந்திருக்குங் கடவுள் தம்மை ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டுச் சாந்நித்தியராய் எழுந்தருளியிருக்கும் இடமாம்" என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் நான்காம் பாலபாடத்தில் விளக்கியுள்ளார்கள். கடவுளது திருவடியில் ஆன்மாலயிப்பதற்கு உரிய இடம் அல்லது ஆணவமலம் அடங்குவதற்குரிய இடம் என்று பொருள் கோடலு மொன்று. ஆலயங்கள் நித்தியம், நித்தியாங்கம் நைமித்திகம், நைமித்தியாங்கம், காமிகம், காமிகாங்கம் என்னும் 'ஆறு உறுப்புக்களானும்' நடத்தப்படும். நைமிகத்துள் ஒன்றுதான் மகோற்சவம்.

உற்வம் என்னும் சொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு (உத் – மேலான, சவம் - ஐந்தொழில்; உத் — ஞானம், சவம் — போகமோட்சம்) மேலான ஞானத்தையும் போகு மோட்சத்தையும் கொடுப்பதென்பது ஒரு கருத்து. சிவபெருமான் ஐந்தொழில் களையும் செய்து உயிர்களைக்காக்கும் முறையைத் திருவிழாக்கள் வெளியிடுகின்றன. இவற்றுட் கொடியேற்றம்வரையுள்ள கிரியைகள் படைத்தலையும், வாசனத் திருவிழாக்கள் காத்தலையும், தேர்த்திருவிழா அழித்தலையும் பௌர்ணுற்சவம் மறைத்தலையும் தீர்த்தம் அருளலையும் குறிக்கும்.

ஆதிகாலத்திலே தடங்கருணைப் பெருங்கடலாகிய சிவபெருமான் மந்தரகேசரி மலைகள் அச்சாகவும் சூரியசந்திரர்கள் சக்கரமாகவும், ஆறிருதுகள் சந்தியாகவும் பதினுன்கு லோகமும் பதினுன்கு தட்டுக்களாகவும், ஆகாயம் ஆசனமாகவும், உதயாஸ்தமலைகள் கூவிரமாகவும், நதிகள் கொடிகளாகவும், நட்சத்திரங்கள் விதானமாகவும் மோட்சலோகம் மேல்விரிவாகவும், யாகங்கள் சட்டங்களாகவும், நாள் முதலியன இருக்குமரமாகவும், அட்டமலைகள் தூண்களாகவும், அட்டயானைகள் தாங்குவனவாகவும் சத்தசமுத்திரகள் திரைச்சீலைகளாகவும், கன்மஞானேந்திரியங்கள் கலன்களாகவும், கலைகள் முளைகளாகவும், வேதாங்க உபாங்க மநுசாஸ்திரங்கள் மணிகளாகவும், வாயுக்கள் படிகளாகவும், நான்கு வேதங்கள் பூட்டப்படும் குதிரைகளாகவும், அமைக்கப்பட்ட இரதத்திலே எழுந்தருளி கங்கை முதலிய தேவமாதர்கள் சாமரமிரட்டவும் ஊர்வசி முதலிய கணிகைமகளிர் நடனஞ் செய்யவும், மகாமேருமலையை வில்லாகவும், சரசுவதியை வில்லிற்கட்டிய மணியாகவும், வாசுகியை நாணுகவும், விஷ்ணுவைப் பாணமாகவும், அக்கினிதேவனை அவ்வம்பின் கூர்வாயாகவும் வாயுதேவனை அம்பிறகாகவும் கொண்டருளி பிரமனுகிய சாரதி பிரணவமாகிய தூண்டுகோல் கொண்டு செலுத்த திரிபுர அவுணர்களைத் தந்திருப்புன்னகை யக்கினியால் நீறுக்கியருளினுர், என்னும் வரலாற்றுண்மையைக் காட்டுவதே இவ்விரத சேவைக்காட்சியென அநுமிக்கப்பட்டு விஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரூபியாயும் விஸ்வகாரணராயும் விஸ்வசேவியராயும் விஸ்வாந்தரியாமியாயும் இருப்பவர் சிவபெருமானே யென்பதும் முப்புரமென்பது ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மல காரியங்கள் எனவும் அத்திரிபுரங்களையும் நீறுக்கி தாரகாக்கன் கமலாக்கன் வித்துன்மாலி என்னும் மூவர்களையும் தேவர்களையும் அடிமையாகக் கொண்டு அவர்கட்குத் தம்பதமருளி இன்பங் கொடுத்தமை மும்மல காரியங்களையும் கெடுத்து விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவகை யான்மாக்களையும் அடிமையாகக் கொண்டு திருவடிமுத்தி கொடுக்கும் உண்மையெனவும் அறிய நின்றதனுல் எல்லாமாய் அவைகட்குக் காரணமாய் நிற்கும் பரமபதியாகிய சிவபெருமானே ஆன்மாக்கட்கு மும்மலமந்த வாதனைகளைக் கெடுத்து, திருவடிப் பேறுகிய பேரானந்தப் பெருவாழ்வழிப்பர் என்பதும் உணரப்படும்.

அப்பணி செஞ்சடை யாதி புராதனன்
முப்புரஞ் செற்றன னென்பார்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புர மெய்தமை யாரறி வாரே

என்னும் திருமூலநாயனுர் அருளிய திருமந்திரமும் ஈண்டுக்கருதி இன்புறத்தக்கதாகும்

இன்னும் தேர்வடிவம் சரீரமாகவும் அதிற்காணப்படும் நான்கு சிங்கவடிவங்கள் ஆன்மாவின் சர்வவித சீவகாருணியமில்லா லோப குரூரம், சர்வவித ஆசைப்பெருக்க சங்கற்ப விருத்தி, சர்வவிதஅபிமான கோலாகலவிபரீதம் சர்வவித அகங்கார கோபதாபவிகாரமென்னும் இந்நான்குவித கர்மவிருத்திகளாகவும் எட்டுயாளி உருவங்கள் ஆன்மாவினது அஞ்ஞானம், அபிமானம், ராகாதிகுணம், துக்கம், விடயவாசனை, நானுவித கன்மம், உபாதி, அவஸ்தை என்னும் எட்டு வித அநுபவங்களாகவும் கொடிகளெல்லாம் தத்துவ கூட்டங்களாகவும், மணிகளெல்லாம் பீசமந்திர பிரணவாதி சத்தங்களாகவும் குஞ்சங்களெல்லாம் சீவர்கள் மனேசலனத்தால் எண்பத்து நான்கு லக்க யோனி பேதங்களாக மாறிமாறித் தோன்றியடையும் மரணுவத்தையாகவும் கொண்டு சீவர்கள் சிங்கங்களை யொத்த கர்ம விருத்திகளையும், யாளிகளைப்போன்ற அனுபவங்களையும், கொடிகளைப் போன்ற தத்துவக் குளாங்களையும் மணிகளைப்போன்ற லாக்கொலிகளையும்' குஞ்சங்களைப் போன்ற மனசலன தோற்றங்களையும் இல்லையென்னும்படி செய்து சித்திர தீபம்போல நின்று மோன சாட்சாத்கார கோல நிலையில் நிற்க வேண்டுமென்பதும், இந்த லயக்கிரம திதிக் கோலத்தால் அறிவார் நுண்ணுணர்வோர் எனவும் சிவக்ஷேத்திரலாய மகோற்சவ உண்மை என்னும் நூலில் சதாவதானம் நா. கதிரவேற்பிள்ளை அவர்கள் (பக், 88 — 92) கூறியிருப்பதும் ஈண்டுநுனித் தறியத்தக்கதாகும்.

# இரதோற்சவ உண்மைப் பொருள்

விநாயகனே வல்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

பிரணவமானது சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் ஆசனமாயும், ஏனைத்தேவர்க்கெல்லாம் பிறப்பிடமாயும், எல்லாமந்திரங்களுக்கும் வேதங்களுக்கும் மூலமாயும் உள்ளது ஆதலால் பிரணவம் மூலமொழியெனவும், தனிமொழியெனவும், ஓங்காரமெனவும், குடிலையெனவும்படும். இதன் வடிவமே விநாயகக்கடவுள். விநாயகர் பிரணவ வடிவினராதலை அவரது திருமுக முணர்த்தும். பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன் என்னும் ஆன்றோர் வாக்கும் சிந்திக்கத்தக்கதாகும்,

பிரணவத்தின் வரிவடிவை முகற்கணறிவது மரபாம். முதலாம் இரண்டாம் உறுப்புக்கள் முறையே நட்சத்திர வடிவு, தண்ட வடிவுகளாக அமையப்பெற்றது. பிரவமென்று காமிகாதமங் கூறுகின்றன. ஆதலால் அந்த இரண்டுறுப்புங் கலந்த வடிவம் ஊமை எழுத்து என்றும், மூலமனு என்றும் பிள்ளையார் சுழி என்றும், மௌனாக்ஷரம் என்றும் சொல்லப்படும். "உ" என்னும் எழுத்து நாதவிந்துகளின் வரிவடிவாம், இது ஓங்கார வாச்சியராகிய விநாயகரது துதிக்கை போலாம். இதுபற்றியே கணபதியை முதலில் வழிபடும் மரபை உலகம் கைக்கொண்டு அனுட்டித்து வருகின்றது,

இரதோற்சவம் சிருஷ்டி முதலிய பஞ்சகிருத்தியங்களுள் சங்காரத்தைக் குறிக்குமென்று ஆகமங்கள் கூறுகின்றன. சிவபெருமான் சூரிய சந்திரர்களை உருள்களாகவும் சரம்' அசரம் ஆகிய பொருட்களைத் தேரின் ஒவ்வொரு உறுப்புகளாகவும், நான்கு வேதங்களைக் குதிரைகளாகவும் அமைந்த பூமியாகிய தேரில் மேருமலையை வில்லாகவும், வாசுகி என்னும் பாம்பை நாணாகவும், விஷ்ணுவை அம்பாகவும், கொண்டு எழுந்தருளிப் பிரமாவாகிய சாரதி பிரணவமாகிய சவுக்குக்கொண்டு செலுத்தச் சென்று புன்முறுவல் செய்த சமயத்தில் அபபுன்முறுவல் அக்கினியினால் முப்புரங்களும் நீறாயின. இதனையே இரதோற்சவம் உணர்த்துகின்றது.

இவ்வாறு உண்மைப் பொருள்களை அறிவித்து நிற்கும் மிக்க மகத்துவம் வாய்ந்தது இரதம் என்பதை யுணர்ந்த துன்னாலைச் சைவாபிமானிகள் வல்லியாநந்த விநாயகர் கோவிலுக்குப் புதிதாய் ஒருதேர் செய்வித்து நிறைவேற்றினர். நிறைவேறும்படி செய்தருளிய எல்லாம் வல்ல வல்லியானந்தப் பிள்ளையார் இததிருப்பணியில் ஈடுபட்ட புண்ணியவான்கள் எல்லோருக்கும் நல்லருள் பாலிப்பாராக!

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொல்
பொருவாக்கும் பீடும் பெருக்கும் — உருவாக்கும்
ஆதலால் வானோர்க்கு ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

250266

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் பெருமை

பிள்ளைகளின் உள்ளம் கள்ளம் இல்லாதது. பெரியவர்கள் ஆக ஆசத்தான் காமம், குரோதம், மோகம், சோகம் முதலிய தீயகுணங்கள் படிப்படியாக வந்து சேர்ந்து குவிகின்றன.

ஞானிகளுக்கு உவமை கூறவந்த முற்றுந்துறந்த பட்டினத்தடிகள் "குழந்தைகளின் உள்ளம் போன்றது" என்றே கூறியருளினர்.

"சேய்போல் இருப்பார் கண்டீர்
உண்மை ஞானம் தெளிந்தவரே"

என்பது பட்டினத்தாரின் திவ்வியதிருவாக்காகும்.

சிவபெருமானுக்கு நான்கு பிள்ளைகள்: விநாயகர், முருகன், வீரபத்திரர், வைரவர். சிவகுமாரர்களில் மூத்தவர் பிள்ளையார். அதனுல் மூத்தபிள்ளையார் என்று பெயர் பெற்ருர். இவர் இளம் பிள்ளையாக இருந்தாலும் ஞானக் கொழுந்து. சகல ஆற்றலும் படைத்தவர். அதனுல் பிள்ளை என்ற சொல்லுடன் பெருமையைக் குறிக்கின்ற 'ஆர்' என்ற விகுதி சேர்ந்து, பிள்ளையார் எனப் பெயர் பெற்ருர்.

நமது துன்பங்களுக்கெல்லாம் காரணம் வினைதான். மற்ற மூர்த்திகள் வினைகளைத் தீர்க்கும். ஆனுல் பிள்ளையார் வினைகளின் வேரையே களைந்தெறிவார். விக்கினங்களை அடியோடு தீர்த்துவிடுவார். அதனுல் "விக்கினேசுவரர்" என விழுமிய பெயரால் விதந்தோதப்பெற்ருர்.

செடியை வெட்டினுல், மீண்டும் வேரிலிருந்து செடி முளைக்கும். அதுபோல் வினையைக் களைந்தால் மீண்டும் வினை தளிர்க்கும். வேரை அகழ்ந்தெடுத்துவிட்டால் செடி முளைக்காது. அதுபோல் வினைகளின்வேரை அகழ்ந்தெடுக்கும் தெய்வம் விநாயகர்.

"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே

என்னும் ஆன்ருேர் வாக்கும் அறிந்து மகிழ்வதற்குரியதாகும்.

பிள்ளையாரது பெருமை எழுத்துக்கும் சொல்லுக்கும் அடங்காதது. கற்பகதரு நினைத்தவையெல்லாம் தரவல்லது. பிள்ளையார் தன்னை வழிபட்டோர் நினைத்தவையெல்லாம் ஒருங்கே தரவல்லவர். அதனுல் கற்பகப்பிள்ளையார் என்று கற்ருேரும் மற்ருேரும் கனிந்தேத்திப் புகழ்வார்கள்.

மலர்களைக்கொண்டு, பவள நிறத்தைப்போல் சிவந்த மேனியையும் துதிக்கையையும் உடைய விநாயகக் கடவுளது திருவடிகளைத் தவருமல் அடைந்து வழிபடுவார்க்கு பேசுந் திறமை உண்டாகும், நல்ல எண்ணம் உண்டாகும், பெருமை பொருந்திய செந்தாமரைப் பூவில் வீற்றிருக்கும் இலக்குமியின் திருவருள் நோக்கம உண்டாகும், அவருடைய உடம்பு நோயினுல் வாடாது. இவ்வுண்மையை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

என ஔவை என்னும் அருந்தமிழ்ச் செல்வி அழகாகப் பாடியிருப்பதும் அறியத்தக்கதாகும். நல்லிசைப்புலமை வாய்ந்த நரை மூதாட்டியார் என்னும் ஔவைப் பிராட்டியார் பாலையும், தெளிந்த தேனையும், செல்லப் பாகையும், பருப்பும் ஆகிய நான்கையும் ஒன்றாகச் சேர்த்து விநாயகப் பெருமானுக்கு மெய்யன்போடு கொடுத்துவிட்டு, சங்கத்தாரால் வளர்க்கப்பெற்ற இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் ஒருங்கே வாங்கிக் கொண்டார். அதனால் கடல் மடைதிறந்தாற்போலத் தமிழகம் எங்கும் கவிமழை பொழிந்தார்.

திருக்கைலாய மலையில் ஏழுகோடி மந்திரங்கள் அடங்கிய சித்திர மண்டபம் ஒன்றிருந்தது. அம்மந்திர சித்திர மண்டபத்துக்குப் பார்வதியும் பரமேஸ்வரனும் எழுந்தருளினார்கள். ஏழுகோடி மந்திரங்களுக்கு நடுவே சமஷ்டிப்பிரணவம், வியஷ்டிப்பிரணவம் என்ற இருபிரணவங்கள் ஒளி செய்துகொண்டிருந்தன. அந்த இரு பிரணவ மந்திரங்களும் தன்னோடு ஒன்று மருவியது. அப்பிரணவங்களிலிருந்து பிரணவாகார யானைமுகத்துடன் பிள்ளையார் திருஅவதாரம் செய்தார்.

பிள்ளையார் அம்மையப்பன் அடிமலர்களை வணங்கினார். செம்மைநிற முள்ளவனாகிய பிள்ளையை சிவமூர்த்தியும் சிவகாமசுந்தரியும் எடுத்து உச்சிமோந்து உவந்து "உன்னை உள்ளன்போடு வணங்கி வழிபட்டோர்க்கு இடையூறுகளைக் களைந்து இன்னருள் செய்க" என்று கூறிக் கணங்களுக்கெல்லாம் தலைவராக்கி வாழ்த்தியருளினர். ஆதலால் கணபதி, கணேசர், கணதிபன், கணநாதர் என்ற திருநாமங்களைப் பெற்றார்.

தேவர்களுக்கு இடுக்கண் செய்த கஜமுகாசுரனை அழித்து அவர்களைக் கழிபேரின்பம் அடையச் செய்தார். தமது ஒரு மருப்பை முரித்து மகாபாரத சரித்திரத்தை மகா மேருமலையில் எழுதியருளினார். மரீசி முனிவருடைய மகள் வல்லபையைத் திருமணம் முடித்தார்.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

நல்ல சொற்பொருள் நாளும் நடாத்தவும்
எல்லை காணரும் பேரின்ப மெய்தவும்
வெல்லும் யானை முகத்தினை மேவிவாழ்
வல்ல பைக்குரி யானை வழுத்துவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாலய தரிசனம்

யாவரும் நாடோறும் திருக்கோயிலிற் சென்று சிரத்தையோடு விதிப்படி தரிசனஞ் செய்தல் வேண்டும். தேவாலய தரிசனம் நாடோறுஞ் செய்தற்கு இயலாதாயின் புண்ணிய காலங்களிலேனுந் தவறுமற் செய்தல் வேண்டும்.

ஆலய தரிசனஞ் செய்ய விரும்புவோர் ஆலயத்துக்குச் சமீபத்திலுள்ள புண்ணிய தீர்த்தத்திலே ஸ்நானம் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து அனுட்டானம் முடித்துக்கொண்டு ஆலயத்துக்குப் போதல் வேண்டும்.

ஆலயத்துக்குப் போகும்போழுது ஒருபாத்திரத்திலே தேங்காய் பழம் பாக்கு வெற்றிலை முதலியவை வைத்து அரைக்குக் கீழ்ப்படாது மேலே உயர்த்தப்பட்ட கையில் ஏந்திக்கொண்டு போதல் வேண்டும் இவைகளுக்குப் பொருளில்லாதவர் பத்திரபுஸ்பங்களேனுங் கொண்டுபோய்க் கொடுத்து வணங்கல் வேண்டும்.

திருக்கோவிலுக்குச் சமீபித்தவுடனே, திருக்கோபுரத்தை வணங்கி, இரண்டு கைகளையுஞ் சிரசிலே குவித்துக்கொண்டு உள்ளே பிரவேசித்து பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

ஆடவர் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும்பண்ணல் வேண்டும். அட்டாங்க நமஸ்காரமாவது தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய் புயங்களிரண்டு என்னும் எட்டு உறுப்பும் நிலத்திலே தோயும்படி வணங்குதல். பஞ்சாங்க நமஸ்காரமாவது தலை, கையிரண்டு முழந்தாளிரண்டு என்னும் ஐந்துறுப்பும் நிலத்திலே தோயும்படி வணங்குதல்.

நமஸ்காரம் மூன்று தரமாயினும் ஐந்து தரமாயினும் ஏழுதரமாயினும் ஒன்பது தரமாயினும் பன்னிரண்டு தரமாயினும் பண்ணல் வேண்டும். ஒருதரம் இருதரம் பண்ணுதல் குற்றம்.

கிழக்கே யாயினும் வடக்கே யாயினும் சிரசை வைத்து மார்பு பூமியிலே படும்படி வலக்கையை முன்னும் இடக்கையைப் பின்னும் நேரே நீட்டிப் பின் அம்முறையே மடக்கி வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலே பொருந்தும்படி கைகளை அரையை நோக்கி நீட்டி வலக்காதை முன்னும் இடக்காதை பின்னும் மண்ணிலே பொருந்தச் செய்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

நமஸ்கரித்து எழுந்து கும்பிட்டு கடவுளை மறவாத சிந்தையோடு இரண்டு கைகளையும் இதயத்திலே குவித்துக்கொண்டு கால்களை மெல்ல வைத்துப் பிரதக்ஷிணம் பண்ணல் வேண்டும்.

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடித்
தலையாரைக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றியென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறுநில்லே.

— திருநாவுக்கரசு சுவாமிகள்


# S. S. T. EXPORTS

154, WOLFENDHAL STREET,
COLOMBO - 13


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்ந்த வாழ்வுக்கு ஒரு வழி

* * * * * * * * * * * * *

மக்களுடைய எண்ணம், சொல், செயல் என்னும் இம் மூன்றில் சொல்லையும் செயலையும் நிகழ்த்துகின்றவர்களே யன்றிப் பிறரும் அறிந்து கொள்ளலாம். ஆனால் எண்ணத்தை அதை எண்ணுகின்றவர் மாத்திரமே அறியலாம். இம்மூன்றினுள்ளும் செயல் குறைவாகவும் சொல் அதிகமாகவும் நிகழும். எண்ணங்களோ அளவின்றி நிகழ்கின்றன. மக்களுடைய உள்ளம் எண்ணுதலை இயல்பாக உடையதாய் இருக்கின்றது.

''ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியும் அல்ல பல''

என்னும் இக்குறளில் தமிழ்மறைதந்த வள்ளுவனூர் மக்களின் எண்ணங்களின் பெருக்கத்தை எடுத்துக் காட்டுகிறார். இந்த எண்ணங்கள் நல்லனவாகவும் தீயவையாகவும் இருக்கும். இந்த எண்ணங்கள் யாவற்றையும் நல்லனவாக - உயர்ந்தனவாக எண்ணும் பழக்கத்தை மக்கள் உண்டாக்க வேண்டும். இவ்வாறு செய்தாற்றான் உள்ளத் தூய்மையும் உயர்வும் ஏற்படும். இதனாலேயே, மக்களுக்கு வாழும் வழியினை வகுத்துக்காட்டிய வள்ளுவப் பெருந்தகை,

''உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்'' எனப் பணித்தார்.

நாம் உயர்ந்தனவற்றையே நினைத்தாலும் அவையெல்லாம் நிறைவேறிவிடுமா? என்ற ஐயமும் இதனால் மனச்சோர்வும் ஏற்படுதல் இயல்பு. இவற்றையும் நீக்குதற்கு வள்ளுவர் பெருமான்,

''உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து''

என்று உரைக்கின்றார். நாம் நினைத்த உயர்ந்த கருத்துக்கள்யாவும் நிறைவேறா விட்டாலும் உயர்ந்த எண்ணம் எம்மனதைவிட்டகலாது என்று ஆறுதலும் கூறுகிறார். எனவே உயர்வடைய விரும்புகிறவர்கள் எப்பொழுதும் உயர்ந்தவற்றையே எண்ணுதல்வேண்டும் உள்ளம் உயர்வடைய வாழ்வும் உயர்வடையும்.

உயர்ந்த எண்ணங்களுடன் உள்ளம் ஊக்கமுடையதாகவும் இருத்தல் வேண்டும் ஊக்கமில்லாத உள்ளத்தவர் உயர்வுபெற முடியாது. உள்ளத்தின் ஊக்கத்தின் அளவுக்கே ஒவ்வொருவரும் உயர்வடையலாம். இந்தப் பேருண்மையை வள்ளுவர் பெருமான் நாம் நாடோறும் காணுங்காட்சி ஒன்றினைக் காட்டி விளக்குகிறார்.

''வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு''

என அன்னார் காட்டும் அழகான காட்சி புலவரின் உள்ளமாட்சியையும் இனிது உணர்த்துகின்றது. குறளிலுள்ள ''உள்ளத்தனையது'' என்பதற்கு உள்ளத்தின் ஊக்கத்தின் அளவினது எனப் பொருள்கொள்ளல் சாலவும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

எல்லாம் வல்ல வல்லியானந்தப் பிள்ளையார் இரதத்தில் ஏறி உலாவருவதற்காக, ஆச்சப்பெற்ற சித்திரத்தேர்த் திருப்பணிக்காக பணஉதவி புரிந்த புண்ணிய சீலர்கள் யாவருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அழகான சித்திரத்தேரை உருவாக்கிய பிரதம ஆசாரி திரு. சி. அப்பாத்துரை அவர்களுக்கும் மற்றும் ஆசாரிமார்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைக் கூறுகின்றோம்.

தேர்மணிகளை அன்புடனளித்த பெருந்தகைகளுக்கு எங்கள் நன்றி என்றென்றும் உரித்தாகுக!

தேர்விடும் கட்டிடத்திற்கு உதவிவழங்கிய திருமதி வயித்திலிங்கம் சரஸ்வதி அவர்களுக்கும் திரு. வீ. பிரதாபன் அவர்களுக்கும் எங்கள் இதயங்கனிந்த நன்றியைச் செலுத்துகின்றோம்.

மெய்வருத்தம் பாராது பசிநோக்காது கண்துஞ்சாது எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாது அவமதிப்புக்களையும் பொருட்படுத்தாது தேர்த்திருப்பணிக்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்ட மெய்த்தொண்டர்களுக்கு மனங்கனிந்த நன்றியை மனமாரத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தெய்வீக மணம் கமழும் திவ்விய தேர்த்திருப்பணி மலர் இவ்வாறு உருப்பெறுவதற்கு தமது எழுத்துத் திறமையால் உதவிபுரிந்த பண்டிதர் ஆர். கே. முருகேசனார் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். குறுகிய காலத்தில் இம்மலரை அச்சிட்டு வழங்கிய ஊழியன் அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றி என்றும் உரித்தாகுக.

இன்னும் எங்கள் கவனத்திற்கு அப்பாற்பட்ட தவறுகளிருந்தால் அவற்றைத் தயவு கூர்ந்து மன்னித்துக் கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வி. வடிவேலு
9-ம் உற்சவ உபயகாரர்

"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்"



SPACE DONATED BY

*Puspa Jewellers*

புஸ்பா ஜுவலர்ஸ்

30, VANROVYEN STREET
COLOMBO - 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☎ 31357

**RATHNA MAHAL**

JEWELLERS

97, SEA STREET, COLOMBO - 11

**இரத்தின மஹால்**

நகை மாளிகை

97, செட்டியார் தெரு, கொழும்பு - 11.

**V. T. V. DEIVANAYAGAM PILLAI & CO,**

General Merchants, Commission Agents & Estate Suppliers

Distributors of: B. C. C., O. C. C., B. C. M.

Oil & SriLanka Tobacco Industries Corporation

37, 5th CROSS STREET,

COLOMBO – 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைலோன் மாட்

238, செட்டியார் தெரு, கொழும்பு - 11.

மின்பிடி வலைகள் நூல்கள் விற்குமிடம்

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

# NYLON MART

FISHING NETS & TWINE MERCHANTS

238, SEA STREET. COLOMBO - 11

250266

University of Jaffna
250266
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☎ 28991 - 33712

# A. K. GOLD HOUSE

Jewellers & Gem Merchants

56 - 58, SEA STREET, COLOMBO - 11.

ஏ. கே. கோல்ட் ஹவுஸ்

Articles are all Guaranteed & Genuine

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Telephone: 33977

# Western Jewellery Mart

JEWELLERS



வெஸ்டன்

நகைமாளிகை

60, SEA STREET, COLOMBO - 11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org